பக்கங்கள்: 12 + VI
விலை:20 ரூபா

தேரேறி வாருமையா....
நல்லருள் தாருமையா....
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 07 சனிக்கிழமை 22.12.2018 கதிர் 47



# எதிர்க்கட்சித் தலைவர் யார்? நீடிக்கின்றது கடும் சர்ச்சை!



## விரைவில் முடிவு என்கிறார் சபாநாயகர்

கொழும்பு, டிசெம்பர் 22

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்துக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் முடிவை அறிவிப்பேன்.

- இவ்வாறு சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்குக் கூடிய நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் அறிவிப்பு நேரத்தில், அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 11 »

## இடைக்காலக் கணக்கறிக்கை நாடாளுமன்றில் நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 22

2019ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்கான செலவீனங்களுக்காக நிதி அமைச்சர்

பக்கம் 11 »

## இனி இது ரகசியம் அல்ல!

சோடாப் புட்டியைத் திறந்ததும் அது சீறும். சற்று நேரத்தில் 'காஸ்' இறங்க அது அடங்கி விடும்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும்

பக்கம் 02 »

## எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்தவை ஏற்காதீர்கள்!

### கூட்டமைப்பு சபாநாயகருக்கு மனு

கொழும்பு, டிசெ. 22

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்க வேண்டாம் என வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் மனு

பக்கம் 11 »

## என் மீது மீண்டும் வீண்பழி சுமத்துகிறார் நாமல்குமார

### சபையில் நீதி கேட்டார் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதி கொலை முயற்சிச் சதி சம்பந்தமான விடயத்தில் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லையென்பது பொலிஸ் விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் நாமல்குமார என்ற பைத்தியக்

பக்கம் 11 »

## பதவியை இழந்தமையால் புலம்புகிறாராம் சம்பந்தன்

### மஹிந்தவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, டிசெ. 22

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் ஆனால் புலம்பிக் கொண்டிருக்கிறார் என மஹிந்த

பக்கம் 11 »

## தேசிய ஜனநாயக முன்னணி கட்சியாக விரைவில் பதிவு!

### அனுமதியளித்தது ஐ.தே.க. செயற்குழு

கொழும்பு, டிசெ. 22

ஐக்கிய தேசிய முன்னணியை, ' தேசிய ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் அரசியல்

பக்கம் 11 »

### அமைச்சரவையில் புறக்கணிப்பு;

## மைத்திரியின் முடிவுக்கு எதிராக நீதிமன்றை நாடும் பொன்சேகா

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்துக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அடிப்படை உரிமை

பக்கம் 11 »

## எரிபொருள்கள் விலை அதிரடியாகக் குறைப்பு

### ஐ.தே.மு. அரசின் நத்தார் பரிசு

கொழும்பு, டிசெ. 22

எரிபொருள்களின் விலை நேற்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும் வகையில் அதிரடியாகக்

பக்கம் 11 »

## மிரட்டலுக்கு பணிந்து தேர்தல் நடைபெறாது

### ஐ.தே.க. நேற்று சபையில் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் பொதுத் தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராக இருக்கிறோம். ஆயினும் மஹிந்த தரப்பினரின் மிரட்டலுக்கு அஞ்சி ஒருபோதும் தேர்தலை நடத்தப் போவதில்லை என அமைச்சர்

பக்கம் 11 »

## ஐ.நா. செயலர் வரவேற்பு



கொழும்பு, டிசெ. 22

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, அமைதியாக, அரசமைப்பு நெறிமுறைகளுக்கு அமையத் தீர்க்கப்பட்டிருப்பதை ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ் வரவேற்றுள்ளார். இது

பக்கம் 11 »

## ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயாரா?

### மனோ கணேசன் சவால்



கொழும்பு, டிசெ. 22

தேர்தல் கேட்டு ஓலம் இடுபவர்களுக்கு ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கத் தயாரா என அமைச்சர் மனோ

பக்கம் 11 »

## அமைதியாக இருப்போம் என்று ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள்!

### அரசை எச்சரிக்கிறார் மஹிந்த எம்.பி.



கொழும்பு, டிசெ. 22

நாம் எதிர்க்கட்சியில் இருப்பதால் அமைதியாகவே இருப்போம் என நினைத்துவிட

பக்கம் 11 »

## பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் மைத்திரி முன்பாக பதவியேற்பு

### கல்வி ராஜாங்க அமைச்சராக விஜயகலா


கொழும்பு, டிசெ. 22

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசின் அமைச்சரவை ஏற்கனவே நியமிக்

பக்கம் 11 »



இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் தேரேறிவரும் தில்லை நடராஜப் பெருமான்
நல்லருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!
LITRO GAS
லிற்றோ தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்கள்
S.V.முருகேசு
No. 154, Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106 Hospital Road,Jaffna.
T.P : 021 492 5830,
021 222 4341



# வலி.தென்மேற்கு பட்ஜெட் ஏகமனதாக நிறைவேறியது

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசனால் சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்திட்டம் நேற்று நடந்த விசேட சபை அமர்வில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் வரவேற்புடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2018 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையைப் பொறுப்பேற்ற பின்னர் வெளிவரும் முதலாவது வரவு செலவுத்திட்டம் இது வாகும்.

இவ்வரவு–செலவுத் திட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்கு எனச் சபை நிதியில் ரூபா 3 கோடி 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக ஏனைய நிதியில் ரூபா 21கோடி 15 இலட்சம் மேலதிக அபிவிருத்தி வேலைகளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. சபையின் பொது நிர்வாக சேவைகளுக்காக மேற்கொள்ளப்படவுள்ள வேலைகளுக்காக ரூபா 2 கோடி 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார சேவைகளுக்காக 4கோடி 4 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் காணி கட்டடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 7கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 28 உறுப்பினர்களினதும் ஒத்துழைப்புடன் சபைக்குட்பட்ட 28 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. அவ்வீதிகளுக்கான வீதி விளக்குகளும் முழுமையாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் பொருத்தப்படவுள்ளன.

மேலும் சபையால் மேற்கொள்ளப்படும் நீர்விநியோக சேவைகளுக்காக 20 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நலன்புரி சேவைகளான சந்தைகள் மற்றும் நூலகங்களுக்காகவும் விளையாட்டுமைதான புனரமைப்பிற்காகவும் மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்காகவும் ரூபா 7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# மழை சில தினங்கள் நீடிக்கும்

கொழும்பு, டிசெ. 22

காற்றழுத்த தாழமுக்கத்தின் காரணமாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் சுமார் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் வடகிழக்குப் பருவ மழை இன்று சனிக்கிழமை இரவுடன் நிறைவுக்கு வருகிறது என்று வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

அதனால் நேற்று முதல் இன்று இரவுவரை இலங்கை, தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகவில் மழையுடனான காலநிலை தொடரும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழமுக்கம் காரணமாக வடக்கு– கிழக்கு வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அடுத்த சில தினங்களில் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு வடக்கு மாகாணத்தில் மழைவீழ்ச்சி மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் நேற்று குறிப்பிடத்தக்க அளவு மழை பெய்தது. காலை முதல் இரவு வரை மழை தொடர்ந்தது. இதனால் தாழ்ந்த பிரதேசங்கள் பல வெள்ளத்தில் மூழ்கின. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் பாடும் அப்படித்தான் போலும்.

ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு பிரச்சினை வரும்போது முதலில் முந்திக் கொண்டு அந்தக் கட்சிதான் சீறும். இதோ கூட்டமைப்பை உடைத்துவிடு வது போல கெம்பி எழும். ஆனால் வந்த வேகத்தில் பொங்கி எழுந்த அந்த வீச்சு புஸ்வாணமாய் அடங்கிப் போய்விடும்.

இப்போதும் கூட மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டி ஏதோவெல்லாம் ஆரவாரம் பண்ணியது ரெலோ.

ரணில் அரசுக்கு முண்டு கொடுப்பதாயின் ஐந்து அம்சவிடயங் களுக்கு எழுத்தில் உறுதி பெற வேண்டும், இல்லையேல் களேபரம் என்ற மாதிரி அக்கட்சி பொங்கி எழுந்தது.

சோடப் புட்டி காஸின் சீற்றம் அது என்று கருதி அதைப் பொருட்படுத்தக் கூட இல்லாமல் அசண்டையீனமாக நடந்து கொண்டது சம்பந்தன் – சுமந்திரன் கூட்டு.

தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு இல்லாவிடின் டிசெம்பர் 31உடன் கதை கந்தல்தான் என்று ரெலோவின் மூத்த தலைவர்கள் சிலர் அடிக்கடி குறிப்பிடத் தவறுவதில்லை.

ஆனால் டிசெம்பர் 31 வரப் போகின்றது. ரெலோவின் தரப்பிலிருந்து எந்த அசுமாத்தமும் இல்லை. எல்லாம் வழமை போல ஒப்பேறி முடியும் போல.

ரணில் அரசுக்கு முண்டு கொடுத்தாலும், வரவு – செலவுத் திட்டத்தில் அதற்கு ஆதரவு கொடுப்பதில்லை என்றும் கூட சோடப் புட்டிச் சீற்றம் போல கொதித்தெழும்போது ரெலோ அறிவிப்பு வெளியிடத் தவறவில்லை. ஆனால் இப்போது ரெலோவின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ரணில் அரசின் இடைக்கால நிதி ஒதுக்கீட்டை ஒருமனதாக ஏற்று அங்கீகரித்துவிட்டார்கள்.

*'யாருடைய பேச்சோ விடிஞ்சாப் போச்சு என்ற மாதிரி இருக்கின்றது ரெலோவின் போக்கு'* எனத் தம்மைத் தாமே நொந்து கொண்டார் வயதில் மூத்த – ரெலோ ஆதரவாளரான – ஒரு மூத்த பிரஜை.

ஸ்ரீகாந்தாவும் சிவாஜிலிங்கமும் ஏனையோரும் கட்சியின் மத்திய செயற்குழுவில் நீட்டி, முழங்கித் தமது கைவரிசையைக் காட்ட, கட்சியின் இரண்டே இரண்டு எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதனும், கோடீஸ்வரனும் தம்பாட்டில் மீகாமன் சுமந்திரன் காட்டும் திசையில் படகை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர் என்பது தான் நிஜம் போலும்.

★ ★ ★

தம்மை அமைச்சராகப் பதவியேற்க அனுமதி மறுத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்து பாடம் புகட்டுவது என்பதில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மிக உறுதியாக இருக்கின்றார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், ஒரு சில நாள்களுக்கு அவரைப் பொறுமை காக்கும்படி கோரியிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

*"தேசிய அரசு அமைப்பது உட்பட பல புதிய முயற்சிகள் நடப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. அதற்கான கதவுகளை நாம் இறுக்கி மூடிவிடக்கூடாது. சமரசத்துக்கான வாய்ப்புக்களைத் திறந்து வைத்திருப்பதே நல்லது. ஆகவே தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படும் வரை காத்திருங்கள். அதற்குள் நியாயம் பெறுவதற்கான வாய்ப்பு வரலாம். வராவிட்டால் வழக்குக்குப் போகலாம்"* – என்ற சாரப்படத் தெரிவித்து சரத் பொன்சேகாவை இப்போதைக்குச் சற்று அடக்கி வைத்திருக்கின்றார் பிரதமர் ரணில்.

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குப் பொதுவாக அந்த அடிப்படை உரிமை மீறப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பொன்சேகாவின் பொறுமைக் காலம் ஒரு மாதத்தைத் தாண்ட மாட்டாது என எதிர்பார்க்கலாம்.

- மின்னல்-



# தேசிய அரசு அமைப்பதா? அடுத்த வாரமே முடிவாம்

கொழும்பு, டிசெ. 22

தேசிய அரசை அமைப்பதா அல்லது ஐக்கிய தேசிய முன்னணி அரசையே முன்னெடுத்துச் செல்வதா என்று அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அமைச்சரவையில் 30 அமைச்சர்களையே நியமிக்க முடியும் என்பதால், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அமைச்சர் பதவியை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில், தேசிய அரசை அமைத்து, அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 ஆக அதிகரிப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐ.தே.க. திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், அடுத்த வாரமே இதுபற்றி முடிவு செய்யப் படும் என்றும், அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதியுடன் பேசித் தீர்க்கவேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# சட்டம், ஒழுங்கு அமைச்சு விரைவில் ஐ.தே.க. வசம்?

தன்னைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சதித் திட்டம் தொடர்பாக நடக்கும் விசாரணை முடியும் வரை, சட்டம், ஒழுங்கு அமைச்சை ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் வழங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. உயர்மட்ட வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

அடுத்த 20 நாள்களுக்குள் இந்த விசாரணைகள் முடிவடையும் என்றும், அது முடிந்த பின்னர் கூடிய விரைவில் சட்டம் ஒழுங்கு அமைச்சு தமது கைக்கு வரும் என்றும் ஐ.தே.க. வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே சட்டம் ஒழுங்கு அமைச்சை வைத்திருந்த ரஞ்சித் மத்தும பண்டாரவிடமே மீண்டும் அந்தப் பொறுப்பு வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

அவர் தற்போது, பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.தே.மு. அரசை ஆதரிக்கத் தயார்

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு



அரசு உண்மையாக நாட்டுக்குச் சேவை செய்யும் பட்சத்தில் தாம் நிச்சயமாக எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆதரவளிக்கத் தயாராகவிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், தாம் எப்போதும் ஜனாதிபதியின் சார்பாகவே செயற்படுகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிதியமைச்சின் இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றம் இன்று மக்களின் அவநம்பிக்கையைப் பெற்ற ஒருசபையாக மாறியுள்ளது. தேர்தல் ஒன்றின் மூலமே அந்த அவப் பெயரை நீக்க முடியும்.

இந்த அரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தக்க பாடத்தை கற்றுக்கொண்டுள்ள நிலையில், அதனைக் கவனத்தில் கொண்டு அரசியல் - பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

ஒக்ரோபர் 26ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு பிழை என நீதி முன்னிலையில், இன்னும் உறுதியாகாத நிலையில், அதனை சூழ்ச்சி எனக் கூற முடியாது - என்றார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்தவேண்டும்

## கோருகிறார் குமார வெல்கம



அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

களுத்துறைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டு மக்கள் தெரிவித்தாலும் எந்தவொரு தேர்தல் தொடர்பில் கருத்துக்களை தெரிவித்தாலும் புதிய ஜனாதிபதி ஒருவர் தேவை என்பதை உணர வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையில் இருந்து மீள நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)




யாழ்ப்பாணத்தில்
1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்



1 ஏக்கர் – 16 பரப்பு
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜூ மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

26 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

2 ஏக்கர் – 32 பரப்பு
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜூ மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

49 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்புசெய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

சிறப்புக் கழிவு
ரூபாய் 1 இலட்சம்
வருட இறுதிக்குள் முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டும்


சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் முயற்சி

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தையும், அதை ஒழிக்கும் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமது நாடாளுமன்ற உரை ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

அவர் சுட்டிக்காட்டுகின்றமை போல நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அளவற்ற அதிகாரங்கள், வரம்பு மீறல்களினால் அதிருப்தியுற்றுள்ள மக்கள் கடந்த சில மாதங்களாக நடந்தேறிய சம்பவங்களை மட்டும் அடிப்படையாக வைத்து உணர்ச்சி வசப்பட்டு, பழிவாங்கும் வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் நடவடிக்கையில் ஒரேயடியாக இறங்கி விடக்கூடாது.

மிகுந்த அவதானத்துடனும் தந்திரத்துடனும் நுட்பத்துடனும் கையாளப்பட வேண்டிய அரசியல் சாணக்கிய சமாச்சாரம் இது.

1978 இன் புதிய அரசமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை இந்த நாடு கடந்த 40 ஆண்டுகளாகக் கொண்டிழுத்துவிட்டது. அதன் பலாபலன்களை நன்கு அனுபவித்தும் பட்டறிந்து தெளிந்துவிட்டது.

அதற்காக, இதற்கு முன்னர், சுதந்திர இலங்கையில் 1948 முதல் 1978 வரை, சிறுபான்மையினருக்கு நாடாளுமன்றம் மூலம் – பிரதமர் ஆட்சி முறைமூலம் – இழைக்கப்பட்ட கொடூரங்கள், அவலங்கள், பேரினவாத நடவடிக்கைகள் என்பனவற்றை நாம் மறந்து புறந்தள்ளி விட முடியாது.

இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கிடைத்த வேளை முதல் இலங்கை நாடாளுமன்றமே பெரும்பான்மைக் கொடுங்கோன்மையின் கருவியாகியது; அங்குதான் இனவாதம் அரசோச்சியது; பேரினவாதம் பெரும் எடுப்பில் கட்டவிழ்ந்தது; சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்கேயே ஒரு தலைப்பட்சமாக யாக்கப்பட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டன.

சரவணபவன் எம்.பி. சுட்டிக் காட்டுகின்றமை போல அந்தப் பேரினவாதத் தாக்குதலில் முதலில் பலியாகி விழ்ந்தவர்கள் நமது மலையகத் தமிழ்ச் சகோதரர்களே. இந்தத் தீவின் சுபீட்சத்துக்காகவும், பொருளாதார மீட்சிக்காகவும், மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்த பத்து லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமையை பேரினவாதம் கபளீகரம் செய்து ஏப்பமிட்டு, அவர்களை நாடாற்றவர்கள் என்ற இழிநிலையில் நடுவீதியில் நிர்க்கதியாக விட்ட கொடூரப் பாவத்தை இந்த நாடாளுமன்ற ஆட்சியே முன்னெடுத்தது.

அது போலவே, அதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, பண்பாடு, வாழ்வியல் தாயகம் போன்றவற்றைச் சூறையாடும் சட்டங்களும் நடவடிக்கைகளும் கூட அதே நாடாளுமன்றில் தான் ஊற்றெடுத்தன.

தமிழ் மொழிக்கு இருந்த உத்தியோகத் தகைமையையும் சம அந்தஸ்தையும் முடிவுறுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட 'சிங்களம் மட்டும்' சட்டத்திலிருந்து, கேட்டுக் கேள்வியின்றியும் வகை தொகையின்றியும் தமிழர்களைத் தடுத்து வைத்து, மிக மோசமான, குரூரமான சட்டவியல் முறைமைகள் மூலம் அப்பாவிகளையும் குற்றவாளிகளாக்கித் தண்டிக்கும் பெருங்கொடூரத்துக்குக் காரணமான பயங்கரவாத தடைச் சட்டம் வரை இந்த நாடாளுமன்றத்தில்தான் யாக்கப்பட்டன.

நீதியான – நியாயமான – நடைமுறைச் சாத்தியமான உரிமைகளைக் கோரிய சிறுபான்மை இனங்களை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கையாண்ட குரூரப் பரிமாணம் மூடிமறைக்கத்தக்கதல்ல. அதற்கு, நாடாளுமன்ற அதிகார முறைமையும் ஒன்றும் சளைத்து அல்ல என்பதுதான் எமது பட்டறிவு.

இந்த வகையில் நோக்கும்போது –

"தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் உரிமைகள் அரசமைப்பின் ஊடாக முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு, எல்லாச் சமூக மக்களும் இலங்கை நாட்டில் சமத்துவமாக வாழ முடியும் என்கின்ற சூழல் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படுவது ஆபத்தானது என்ற கரிசனை முற்றிலும் உண்மையானதுதான்" – என்று சரவணபவன் எம்.பி. கூறும் கருத்து அவதானித்து, கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பொறுப்பான கூற்றுத்தான்.

# கொழும்பில் நாசகாரிகளுடன் 1,000 ரஷ்யக் கடற்படையினர்



கொழும்பு, டிசெ. 22

சுமார் ஆயிரம் ரஷ்யக் கடற்படையினருடன், ரஷ்யக் கடற்படையின் அதிநவீன போர்க்கப்பல்களைக் கொண்ட அணியொன்று நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயணமாகவே ரஷ்யக் கடற்படையின் வர்யாக், அட்மிரல் பன்ரெலேவ், பொறிஸ் புரோமா ஆகியன இலங்கை வந்துள்ளன.

இவற்றில், 187 மீற்றர் நீளமான வர்யாக் என்ற அதி நவீன ஏவுகணைப் போர்க்கப்பலில் 529 கடற்படையினரும், 162.8 மீற்றர் நீளம் கொண்ட அட்மிரல் பன்ரெலேவ் என்ற போர்க்கப்பலில், 388 கடற்படையினரும், 161 மீற்றர் நீளமான பொறிஸ் புரோமா என்ற விநியோகக் கப்பலில் 75 கடற்படையினரும் பணியாற்றுகின்றனர்.

இந்த ரஷ்யக் கடற்படைக் கப்பல்கள் அணிக்கு, றியர் அட்மிரல் எட்வேட் மிகெய்லோவ் தலைமையேற்று வந்துள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளன. (ஐ)

# கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் ஆய்வுக் கப்பல்

கொழும்பு, டிசெ. 22

இலங்கைக் கடற்பரப்பில் சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, இந்தியக் கடற்படையின் சமுத்திரவியல் ஆய்வுக் கப்பலான ஜமுனா நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு தொடக்கம், காலி வரையான கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையுடன் கூட்டு சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே இந்தக் கப்பல் கொழும்பு வந்துள்ளது.

85.77 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில், 230 மாலுமிகள் இலங்கை வந்துள்ளனர்.



# கட்சி உறுப்புரிமை விடயத்தைத் தீர்மானிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேவையற்றது

### கூறுகின்றார் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, டிசெ. 22

கட்சி உறுப்புரிமை இல்லாமலாக்கப்படுவது தொடர்பாக அந்தக் கட்சியின் செயற்குழுவே தீர்மானிக்க வேண்டும். இவ்விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அவசியமில்லையென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர், அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பதால் அதே கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியாதென ஐ.தே.க மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், 2002 - 2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சி செய்த காலத்தில் அவர் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்திருந்த போது எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த செயற்பட்டிருந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில், மஹிந்த அங்கத்துவத்தை பெற்றுள்ளமையால் அவரது நாடாளுமன்ற உரிமை பறிபோகும் நிலைமை உள்ளது.

ஆகையால் எந்த கட்சி உறுப்பினராக இருந்தாலும் அவரது உறுப்புரிமையை நீக்குவது தொடர்பில் அந்தக் கட்சிச் செயற்குழுவே தீர்மானிக்க வேண்டும். இதனால் மஹிந்த விடயத்தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அவசியமில்லை - என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்துக்குப் போதை இனிப்புகள் கொண்டு வந்தவர் ஓமந்தையில் சிக்கினார்



யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதை கலந்த இனிப்புப் பண்டங்கள் ஒரு தொகுதியை வவுனியா ஓமந்தை பொலிஸார் நேற்று முன் தினம் மாலை கைப்பற்றினர். அதனைக் கொண்டு வந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நடத்திய வாகனச் சோதனையின்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதை இனிப்புப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன.

போதை கலக்கப்பட்ட பல்வேறு வகையிலான சுமார் 7 ஆயிரம் இனிப்புப் பண்டங்களே இவ்வாறு மீட்கப்பட்டன என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் வரக்காபொல பகுதியைச் சேர்ந்த நபர் என்றும், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் இனிப்புப் பண்டங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் கூறினர். (ஐ)

**நாளை**

23.12.2018

ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: திருவாதிரை மு.இ 11.17 வரை

திதி : பிரதமை மு.இ 10.26 வரை

சுபநேரம் : 9.25 – 10.55 வரை

இராகுகாலம் : 4.55 – 6.25 வரை

# சீனியின் அளவுக்கு ஏற்ப குளிர்பானங்கள் மீது வரி

## கடமைகளைப் பொறுப்பேற்ற கையோடு ராஜித அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 22

சீனியின் அளவின் அடிப்படையில் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு விதிக்கப்படும் வரி மீளவும் அதிகரிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை நியமனம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் ராஜித சேனாரத்ன, மீளவும் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் தனது கடமைகளைச் சுகாதார அமைச்சில் நேற்றுப் பொறுப்பெடுத்தார்.

கடமைகளைப் பொறுப்பேற்றவுடன் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சீனியின் அளவின் அடிப்படையில் சோடா உள்ளிட்ட குளிர்பானங்களுக்கு விதிக்கப்பட்ட வரி 30 சதவீதத்தால் குறைப்பதற்கு முன்னாள் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணித்திருந்தார்.

இதன்மூலம் சோடா உள்ளிட்ட மென்பானங்களின் விலைகள் 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டில் நீரிழிவு நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக்காட்டி குளிர்பானங்களில் உள்ளடக்கப்படும் சீனியின் அளவுக்கு ஏற்ப வரி அதிகரிப்பு முன்னைய கூட்டு அரசில் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்னவால் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. அதனையே பின்னர் மஹிந்த குறைப்பதற்கு அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் அதன் வரியை மீளவும் அதிகரிக்கவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# பாடசாலைகள் ஆரம்பமானதும் மாணவருக்குச் சீருடை வவுச்சர்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

பாடசாலைகள் முதல் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டதும் சுமார் 40 மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் கூட்டு அரசின் கல்வி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். அப்போதைய கல்வி அமைச்சரின் படத்துடன், மாணவர்களுக்கான சீருடைத் துணி வவுச்சர்கள் அச்சிடப்பட்டுத் தயார் நிலையில் இருந்தபோது கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி கூட்டு அரசை ஜனாதிபதி பதவி கவிழ்த்தார்.

இதை அடுத்து, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கடந்த நவம்பர் 2ஆம் திகதி இந்த சீருடைத்துணி வவுச்சர் வழங்குவதை தடை செய்தார்.

மாணவர்களுக்கு வவுச்சர்களுக்குப் பதிலாகச் சீருடைத் துணி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. எனினும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை நேற்று முன்தினம் பதவி ஏற்றது.

இந்த நிலையில் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டதும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வவுச்சர்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இ.போ.ச வடக்கு ஊழியர்கள் நேற்று நிர்வாகத்துக்கு எதிராக போராட்டம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின், வட பிராந்திய சாலையில் நிர்வாகச் சீர்கேடுகள் உள்ளன எனவும் அவற்றைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கத்தினர், வட பிராந்திய சாலை நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பிராந்திய முகாமையாளரின் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தின் ஏழு சாலைகளின் தொழிற்சங்க ஊழியர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மக்களின் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதே நேரம் சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார், நிர்வாகச் செயற்பாடுகளைத் தடுப்பது சட்டத்திற்கு முரணானது. கைது செய்வதற்கு எமக்கு உரிமை உண்டு. ஆகவே வெளியில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் வடபிராந்திய முகாமையாளரின் கொடும்பாவியை எரித்தனர். (ஐ - 07)

# ரூபா 2 கோடி 30 இலட்சம் பெறுமதியான கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 22

சுமார் 2 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான 153 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கிளிநொச்சி மருதநகர் பகுதியில் நேற்றுமுன்திம் மாலை கைப்பற்றப்பட்டது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 98 இலட்சத்து 7 ஆயிரத்து 700 ரூபா பணமும் மீட்கப்பட்டது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவில் பதுக்கிவைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட அதிகளவு கஞ்சா போதைப் பொருள் இதுவாகும் என்று பொலிஸார் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸாரின் பங்குபற்றுதலுடன் இந்த சுற்றிவளைப்பு கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மருதநகர் எமேசன் வீதியில் உள்ள வீடொன்றிலேயே 153 கிலோ 75 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டது. அதனைப் பதுக்கிவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் லட்சுமன் சுதாஜீவ் (வயது-33) என்ற குடும்பத்தலைவர் கைது செய்யப்பட்டார்.

அவர் எந்தவொரு தொழிலிலும் ஈடுபடாமல் கஞ்சா கடத்தல் - வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்த ஆஸி. உயர்நீதிமன்றம் உத்தரவு!



கான்பரா, டிசெ. 22

ஆஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்துமாறு, ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடேசலிங்கம் பிரியா மற்றும் இரண்டு குழந்தைகளைக் கொண்ட இந்தக் குடும்பம், அவர்கள் வசித்த பிலோலா என்ற இடத்தில் இருந்து அதிகாலை வேளையில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். பின்னர் மெல்போர்னில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த இவர்கள் இறுதிநேர பிரயத்தனத்தின் காரணமாக அதில் இருந்து மீட்கப்பட்டனர். ஏற்கனவே இவர்களின் வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், அவர்களை நாடு கடத்துமாறு உத்தரவிட்டது. எனினும் மேன்முறையீட்டின் தீர்ப்பு வரும் வரை நாடு கடத்தலை ஒத்திவைத்திருந்தது.

இந்த நிலையில் மேன்முறையீட்டு மனு மீது நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதன்படி தமிழ்க் குடும்பத்தை நாடு கடத்துமாறு ஆஸ்திரேலிய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனினும், 2019 பெப்ரவரி 1ஆம் திகதிக்கு முன்னதாக இவர்களை நாடு நடத்த வேண்டாம் என்றும் குடிவரவு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குடும்பத்தை நாடு கடத்தவேண்டாம் என்று கோரி 140,000 ஆஸ்திரேலிய மக்கள் கையொப்பங்களை இட்டு உள்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர். (ஐ)

# வாள்களுடன் நடமாடிய இருவர் பளையில் கைது

பளை, டிசெ. 22

பளைப் பகுதியில் குழு மோதலுக்குத் தயாராக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து வாள்களும் மீட்கப்பட்டன என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் குழு மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை ஒரு மணிக்கு மோதலுக்குத் தயாராகக் குழுவொன்று வாள்களுடன் சென்றபோது, பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கும்பலைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

இதன்போதே கும்பலைச் சேர்ந்த இருவர் வாள்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

அதன்போது இருவர் வாள்களுடன் பொலிஸாரிடம் அகப்பட ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தப்பி சென்றவர்களையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ)



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under mentioned post from suitably qualified persons up to 31.12.2018.

**1. Management Assistant - ON CONTRACT (01 POST)**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

**1.** Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at **One Sitting** with credit passes in

i) Sinhala/ Tamil
ii) English Language/ English Literature
iii) Mathematics

**AND**

**2.** Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at **One Sitting** (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)

**3.** Preference will be given to those who possess the following;

a. Fluency in English
b. An acceptable qualification in computer application of not less than six (06) months duration obtained from recognized institutes.
c. Two years of experience in the use of computer application packages.

**4.** Should be not less than 18 years and not more than 30years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 36,900 (fixed)
- This appointment is a fulltime (contract basis) for a period of six months and it can be extended if necessary.

**HOW TO APPLY:**

Applicants who are interested in the above post are requested to submit their application to the following address in the prescribed form available at the Office of the Dean/ Faculty of Graduates Studies, Palaly Road Jaffna.

Assistant Registrar
Faculty of Graduate Studies,
University of Jaffna,
Palaly Road
Thirunelvely
Jaffna

Applicants should deposit Rs 100 at any branch of the Peoples bank in favor of **"University of Jaffna"** account no **"162-1-001-6-0000880.** Applications must accompany a copy of the bank deposit slip.

Applicants are requested to indicate the post name **"Management Assistant – Contract Basis"** in the Top Left hand corner of the envelope.

**Note:**

**1.** Applicants in the Service of Government, Corporations and Statutory Board can submit their application directly. When they present for the interview they should bring a hardcopy forwarded through the Head of Institution concerned.

**2.** Applications without the copies of the O/L and A/L certificates, incomplete applications and applications which are late or that do not accompany the bank slip will not be considered for further processing.

**REGISTRAR**
**21.12.2018**


# உண்மையில் அனுமன் ஒரு முஸ்லிம் பா.ஜ.க. பிரமுகர் கூற்றால் சர்ச்சை



லக்னோவின் பிரபல அனுமர் கோயிலில் புக்கல் நவாப் வெண்கல மணியை நன்கொடையாக அளிக்கும் காட்சி

அனுமர் மிகவும் பிற்படுத் தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கூறி உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தொடங்கிய சர்ச்சை முடிவிற்கு வந்தபாடில்லை. அம்மாநில மேலவையின் பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினரும் இஸ்லாமிய ருமான புக்கல் நவாப் (வயது64), "உண்மையில் அனுமன் ஒரு முஸ்லிம்" என நேற்றுக் கூறியுள் ளார்.

தனது இந்தக் கருத்துக்கு வலு சேர்க்கும் வகையில் புக்கல் நவாப் நேற்று லக்னோவில் கூறும்போது, "முஸ்லிம்களில் அர்மான், ரஹமான், ரம்ஜான், பர்மான், ஜிஷான், ரெஹான் எனப் பெயரிடப்படுகின்றன. இதை ஒட்டியபடி அனுமன் என்ற பெயரும் உள்ளது. இதனால், உண்மையில் அனுமன் ஒரு முஸ்லிம். இதுபோன்ற உச்சரிப்பில் இந்துக்களின் பெயர்கள் கிடையாது" எனத் தெரிவித் தார்.

இது குறித்து புக்கல் மேலும் கூறுகையில், "அனுமர் உலக நாட்டு மக்கள் அனைவரையும் சேர்ந்தவர். அவரை உலகின் அனைத்து மதத்தினரும், ஒவ் வொரு பிரிவினரும் நேசிக்கின் றனர். இதில் என்னுடைய நம் பிக்கையின்படி அனுமர் ஒரு முஸ்லிம்" எனக் கூறியுள்ளார்.

ராஜஸ்தானின் அழ்வரில் நவம்பர் 27 இல் பிரசாரம் செய்த உத்தரப் பிரதேச முதல்வர் யோகி தன் மேடையில் இந்துக் கடவுளான அனுமர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் எனக் கூறி இருந்தார். இதனால், கிளம்பிய சர்ச்சையால் உத்தரப்பிரதேசத்தில் அனுமர் கோயில்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் அமைப்பான 'பீம் ஆர்மி' யினர் தமது நிர்வாகத்தின் கீழ் ஆக்கிர மிக்கத் தொடங்கினர்.

அக்கோயில்களில் உள்ள பிராமணப் புரோகிதர்களை அகற்றி அங்கு தம் சமூகத்தினரை அமர்த்த முயன்றனர். இதையடுத்து, யோகி தன் கருத்தில் இருந்து பின்வாங்கும் வகையில் சமாளித்தபடி மறுப்பு தெரிவித்தார்.

எனவே, யோகியின் தலை வலி முடிவை எட்டிவிட்ட நிலை யில் புக்கல் நவாபின் கருத்து மேலும் பல விமர்சனங்களுக்கு வழிவகுத்து விட்டது.

இது குறித்து உ.பி.யின் எதிர்க் கட்சியான சமாஜ்வாதியின் எம்.எல்.சி. ராஜ்பால் காஷ்யாப் கூறும் போது, "உ.பி.யின் துணை முதல்வர் தினேஷ் சர்மா நமது சீதா மாதா ஒரு டெஸ்ட் டியூப் பேபி எனக் கூறினார். முதல்வர் யோகி அனுமரை மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்றார். அவர் களது கட்சியின் எம்.எல்.சியான நவாப் இப்போது, அனுமர் ஒரு முஸ்லிம் என்கிறார்.

இதுபோல், அனுமர் எந்தச் சாதி, மதத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டறிவதில் பா.ஜ.க. தலைவர்களுக்கு இடையில் உட்கட்சிப் பூசல் எழுந்துள்ளது.

இதன் வெளிப்பாடாக ஒவ் வொருவரும் தன் எண்ணங் களுக்கு ஏற்ற வகையில் அனு மரின் சமூகத்தைக் குறிப்பிடு கிறார்கள்" எனத் தெரிவித் தார்.

இது குறித்து உ.பி. மாநில காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளரான அகிலேஷ் பிரதாப் சிங் கூறும்போது, "அனு மர் எந்தச் சாதி, மதத்தைச் சேர்ந்தவர் என்பதை பா.ஜ.க. முடிவு செய்து விட்டு இறுதியாக அறி விக்க வேண்டும். நம் அனை வரும் அறிந்தவரையில் அனு மர் ஒரு கடவுள். இவரை இந்தச் சாதி, மதம் எனக் குறிப்பிட்டு பா.ஜ.க. பாவம் செய்து வருகிறது. இதற்காக அவர்கள் அனுமரால் தண்டிக்கப்படுவார்கள்" எனத் தெரிவித்தார்.

**யார் இந்த புக்கல் நவாப்?**

உ.பி.யின் ஷியா பிரிவு முஸ்லிமான புக்கல் நவாப், அங் குள்ள அவத் பகுதி நவாப் குடும் பத்தைச் சேர்ந்தவர். சமாஜ்வாதி கட்சியில் இருந்து சமீபத்தில் பாஜகவிற்கு மாறிய நவாபிற்கு பாரதீய ஜனதாக் கட்சி உ.பி. மேலவையின் எம்.எல்.சி. உறுப் பினராக்கி சமீபத்தில் கௌரவித்தது.

இதன் வேட்புமனு தாக்கலுக்குச் சென்றபோது புக்கல், லக்னோவின் ஹஸ்ரத்கன்சிலுள்ள பிரபல அனுமன் கோயிலில் தரிசனம் செய்தார். இத்துடன், அதற்கு இந்தியப் பணத்தில் ரூ.10 லட்சம் மதிப்புள்ள வெண்கல மணியையும் நன்கொடை யாக அளித்திருந்தார்.

இதனால், புக்கல் நவாபின் நடவடிக்கைகள் உ.பி. முஸ்லிம்கள் இடையே சர்ச்சையைக் கிளப்பின. இவரை இஸ்லாத்தில் இருந்து ஒதுக்கி வைப்பதாக உ.பி.யின் தியோபந்தில் உள்ள மதரஸாக்களில் ஒன்றான அஷ்ரபியா அப்போது, ஃபத்வா (சட்ட விளக்கம்) அளித்திருந்தது.

இதற்கு முன் சமாஜ்வாதியில் இருந்த போது 2017 இல் புக்கல், அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டப்பட வேண்டும் எனவும், அதற்காக தாம் ரூபாய் 15 கோடி நன்கொடை அளிக்கிறார் எனவும் அறிவித்து சர்ச்சைக்குள்ளானார்.

(அ)

# ரஷ்யாவின் 18 பேர், 4 நிறுவனங்களின் மீது பொருளாதாரத் தடை அமெரிக்கா விதிப்பு

**ஜனாதிபதித் தேர்தல் தலையீடு உட்படப் பல குற்றச்சாட்டுகள்**

வொஷிங்டன்,டிசெ.22

ரஷ்யாவை சேர்ந்த 18 தனிநபர்கள் மற்றும் 4ஊடக நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாகக் குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பாக ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு விசாரணை குழு, விசாரணை நடத்தி வருகிறது.

இந்த விடயத்தை ஒட்டியே அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க நிதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யா தொடர்ந்து சர்வதேச விதிமுறைகளை அவமதித்து வருவதால் இந்தத் தடைகள் விதிக்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தலையீடு செய்தமை, இணைய வழி தாக்குதல் (சைபர் குற்றம்) மற்றும் இங்கிலாந்தில் வசிக்கும் ரஷ்ய உளவாளி உள்பட 4 பேரைக் கொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் ரஷ்யாவை சேர்ந்த 18 தனிநபர்கள் மீது தடைகள் விதிக்கப்படுகின்றன. இவர்களில் 15 பேர் ரஷ்யாவின் முக்கிய உளவுத்துறை இயக்குநரகத்தில் உறுப்பினர்கள் ஆவார்கள்.

மேலும் உலகளவில் அரசியல் மற்றும் தேர்தல் அமைப்புகளில் தலையீடு செய்ததற்காக ரஷ்யாவின் 4 ஊடக நிறுவனங்கள் மீது தடைவிதிக்கப்படுகிறது.

மேற்கூறிய நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சொந்தமாக அமெரிக்க அதிகார எல்லைக்குள் இருக்கும் அனைத்து விதமான சொத்துகளும், முதலீடுகளும் முடக்கப்படுகின்றன. அமெரிக்க மக்கள் அவர்களுடன் பரிமாற்றங்கள் மேற்கொள்ள தடைவிதிக்கப்படுகிறது. - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டிரம்புடன் முரண்பட்டு ராஜினாமா!

## சிரியாவிலிருந்து படை விலக்குவதில் சர்ச்சை

வொஷிங்டன், டிசெ.22

*அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் (செயலர்) ஜேம்ஸ் மேட்டிஸ் திடீரென இராஜினாமாச் செய்திருக்கின்றார் என அறிவிக்கப்படுகின்றது.*

*சிரியாவில் இருந்து அமெரிக்க பாதுகாப்பு படை வாபஸ் பெறப்படுவதாக டிரம்ப் அறிவித்த மறுநாளே, பாதுகாப்புத்துறை செயலர் பொறுப்பில் இருந்து ஜேம்ஸ் மேட்டிஸ் விலகியிருக்கின்றமை சர்வதேச அளவில் உன்னிப்பாகப் பார்க்கப்படுகிறது.*



இந்த விடயத்தை ஒட்டி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோசமான கருத்து வேறுபாட்டை அடுத்தே தமது இராஜினாமாக் கடிதத்தை மேட்டிஸ் ஜனாதிபதி டிரம்புக்கு அனுப்பி வைத்தார்.

இருவருக்கும் இடையில் மீள் இணக்கம் காணமுடியாத அளவுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கின்றமையை மேட்டிஸ் ஒப்புக் கொண்டார். அவர் இராஜினாமாக் கடிதத்தை அதிபர் டிரம்புக்கு அனுப்பி வைத்தாலும் பெப்ரவரி மாதம் வரை பணியில் தொடர்வார் எனக் கூறப்பட்டது.

சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளை விலக்கும் டிரம்ப்பின் திட்டத்தை மிகக் கடுமையாக மேட்டிஸ் எதிர்த்தார் என்பதை அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டார்.

உங்களுடன் அனைத்து விடயங்களிலும் ஒத்துப் போகக் கூடிய ஒரு பாதுகாப்புச் செயலரைக் கொண்டிருப்பதற்கு உங்களுக்கு உள்ள உரிமையை மதித்து எனது இராஜினாமாவைச் சமர்ப்பிக்கிறேன் - என்ற சாரப்பட மேட்டிஸ் அதிபர் டிரம்புக்கு கடிதம் எழுதினார் எனக் கூறப்பட்டது.

சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத் அரசு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடக்கிறது. இதற்கு மத்தியில், உலகளவில் அச்சுறுத்தலை ஏற்படுத்திய ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு கால் பதித்து ஆக்கிரமிக்க தொடங்கினர். அவர்களை வீழ்த்துவதற்காக அமெரிக்கப் படைகள் அங்கு சென்றன. அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் வசமிருந்த பல நகரங்கள் மீட்கப்பட்டு விட்டன.


இந்த நிலையில் அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளை தோற்கடித்து விட்டதாகக் கூறி, அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படுகின்றன என ஜனாதிபதி டிரம்ப் நேற்று முன்தினம் அறிவிப்பு வெளியிட்டார்.

இது அமெரிக்க கூட்டாளிகளுக்கும், எம்.பி.க்களுக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது. விமர்சனங்களையும் ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும் சிரியாவில் இருந்து அமெரிக்க படைகளை வாபஸ் பெறுவது தொடங்கி விட்டது என வொஷிங்டன் வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், ஜேம்ஸ் மேட்டீஸ் பாதுகாப்புத்துறை செயலர் பொறுப்பில் இருந்து விலக விருப் பம் தெரிவித்து, டொனால்ட் டிரம்ப்புக்கு கடிதம் எழுதியுள்ளார். அதேபோல், டிரம்ப் வெளியிட்டுள்ள டுவிட் பதிவில், வரும் பெப்ரவரி மாத இறுதியோடு ஜேம்ஸ் மேட்டிஸ் தனது பணியில் இருந்து ஓய்வு பெற இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஜின்னாவின் மும்பை இல்லத்துக்கு பாக்., இந்தியா உரிமைச் சர்ச்சை!



*இஸ்லாமாபாத்,டிசெ.22*

*மும்பையில் உள்ள முகமது அலி ஜின்னா வீடு பாகிஸ்தானுக்கு சொந்தமானது என்று பாகிஸ்தான் கூறியதற்கு, இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.*

*மும்பை மலபார் ஹில் பகுதியில் முகமது அலி ஜின்னா 1930 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த வீடு உள்ளது. அந்த வீடு சீரமைக்கப்பட்டு, இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவதாக மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியிருந்தார். இப்போது பாகிஸ்தான் அதனை உரிமை கொண்டாடி உள்ளது.*

*பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் முகம்மது பைசல் கூறும்போது, மும்பையில் உள்ள முகமது அலி ஜின்னா வீடு பாகிஸ்தானுக்கு சொந்தமானது என்பதை இந்தியா ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது. அதனை இப்போது வேறு யாரும் உரிமை கொண்டாட அனுமதிக்க மாட்டோம் - என்றார்.*

*ஆனால் இந்தியா இதனை மறுத்துள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ரவேஷ்குமார் கூறும்போது, ஜின்னா வீடு இந்திய அரசுக்கு சொந்தமானது. அதனை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.*

# சிரியாவிலிருந்து அமெ. படைகலை விலக்கும் டிரம்பின் முடிவுக்கு எதிராகக் கடும் விமர்சனம்

சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் வெற்றி பெற்றதால், அமெரிக்கப் படைகள் அங்கிருந்து முற்றிலுமாக வெளியேறுகின்றன என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தமைக்குக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சிரியாவில் அதிபர் ஆசாத்தின் படைகளுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும் சண்டை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசுக் கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன. இந்த உள்நாட்டுப் போரில் குர்து இனப் போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தங்கள் நாட்டு வீரர்களை அனுப்பி சண்டையிட்டது .

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது ட்விட்டர் பக்கத்தில் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம்.

ஐ.எஸ். தீவிரவாதிகளைத் தோற்கடிக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப்படை வெற்றிபெற்று விட்டது. ஆத லால், சிரியாவில் இருந்து அமெரிக்க ராணுவம் வெளியேறும் எனத் தெரிவித்தார்.





டிரம்பின் கருத்துக்கு ஆதரவு ஒரு பக்கம் பெருக, அவரது முடிவுக்கு எதிரான விமர்சனங்களும் எழுந்துள்ளன. குடியரசு கட்சியின் மூத்த தலைவர்கள் டிரம்பின் முடிவை விமர்சித்துள்ளனர்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்சபை உறுப்பினர் லிண்டா ( இவர் ட்ரம்பின் ஆதரவாளர்) சிரியாவில் அமெரிக்கப் படைகளை திரும்ப பெறும் முடிவு, ஒபாமா செய்த பெரும் தவறை போல் உள்ளது. - என்றார்.

இதுமட்டுமில்லாது இங்கிலாந்தும், ட்ரம்புக்கு எதிரான கருத்தை முன் வைத்துள்ளது. அதிபர் டிரம்ப் சிரியாவில் ஐ.எஸ். தோற்கடிக்கப்பட்டத்தை நிரூபிக்க வேண்டும் என்று இங்கிலாந்து கூறியுள்ளது.

# எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கான போட்டி

# இருவகை ஜனநாயகத்தை உணர்கின்றார் சம்பந்தன்?



ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவி உறுதிப்படுத்தப்பட்ட பின்னரான சூழலில் இலங்கையில், கடந்த ஐம்பது நாள்களாக நீடித்த அரசியல் நெருக்கடி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அறிக்கை வெளியிட்டு பெருமைப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சி உறுப்பினர் சுமந்திரன். சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரின் கடும் முயற்சியினால் இலங்கை உயர் நீதிமன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இலங்கை அரச வர்த்தமானி இதமுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி மீண்டும் நாடாளுமன்றம் செயற்படுவதற்கு அனுமதியளித்துள்ளது. இது குறித்து பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் மூத்த தலைவர்களே பெருமைப்பட்டுள்ளனர். இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளுக்கும் தமிழரசுக் கட்சியின் இப்பங்களிப்பு நன்கு தெரியும்.

எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உருவாக்கப்பட்ட மைத்திரி – ரணில் அரசாங்கம் போன்று இவ்அரசாங்கம் செயற்படும் என்பது குறித்து அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்குத் திருப்பதியுள்ளதாகக் கூற முடியாது.

பூகோள அரசியலில் ரணில் அல்லது மஹிந்த மாத்திரமே அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற சர்வதேச நாடுகளுக்குத் தேவை. சம்பந்தன் அல்லர். அப்படித் தேவை என்று அந்த நாடுகள் கருத வேண்டுமாக இருந்தால், இலங்கைத் தீவில் இரு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ் தரப்புகள் உரத்துக் கூற வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் அந்த செயற்பாட்டில் தமிழ்த் தரப்பு ஈடுபடவில்லை.

ஆனாலும் நல்லாட்சி என்றே செயற்பட வேண்டும் என அமெரிக்கா பாராட்டி வெளியிட்ட அறிக்கையில், அந்தத் தொனி தெரிகிறது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரும் அவ்வாறுதான் கூறியுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவின் மோடி அரசாங்கத்தோடு சேர்ந்து கடந்த சில மாதங்களாக முயற்சி எடுத்திருந்தது.

ஆனால் அந்த முயற்சி என்பது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினாலும் இந்திய மத்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களினாலும் நேரடியாகக் கையாளப்பட்டதல்ல. நேரடியான ஈடுபாடு என்பதில் ரணிலுக்கு ஆதரவு என்ற முகத்தையே இந்த இரு நாடுகளும் வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால் மீண்டும் ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வர எடுத்த முயற்சி என்பது இன்னுமொரு கையினால் மறைமுகமாகக் கையாளப்பட்டிருந்ததாக அவதானிகள் கூறுகின்றனர்.

எனினும் இலங்கையில் சிங்களப் பெருந்தேசியவாத கட்சிகளிடையே ஏற்பட்ட மோதல் என்பதால், மற்றுமொரு பெருந்தேசியவாத கட்சிக்குச் சார்பாகவும், இலங்கை அரசமைப்பின் நேர்மையான காவலனாகவும் தன்னை வெளிப்படுத்தி உயர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது.



இதனால் ராஜபக்ஷ ஆட்சிக்கு வர வேண்டும் என்று மறைமுக முயற்சி ஒன்றின் மூலம் காய்களை நகர்த்திய அமெரிக்காவும் இந்தியாவும் அந்தத் தீர்ப்பை ஏற்று ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாராட்டையும் தெரிவித்திருந்தன.

கடந்த 13 ஆம் திகதி வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தற்போது மீண்டும் ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய அமைச்சரவையும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் புதிய அமைச்சரவையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சுநத்திரக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கவில்லை.

ஆனாலும் இன்னும் சில வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியோடு முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை பெறக் கூடும் எனவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இந்த இடத்திலேதான் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ரணில் பிரதமராகப் பதவியேற்றதும் இதுவரையும் பிரதமராகப் பதவி வகித்து சர்ச்சையை ஏற்படுத்திய மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைவாக சபாநாயகர் கரு ஜயசூரியவும் மஹிந்த ராஜபக்ஷவே எதிர்க்கட்சித் தலைவர் என கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்துமுள்ளார்.

ஆனால் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கவில்லை. இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்கின்றார் என சம்பந்தன் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருக்கும் நிலையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு மூத்த உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க முடியாது என சுமந்திரன் கூறியுள்ளார்.

ஆகவே இலங்கை நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு பதவி வகிக்க முடியாது எனத் தெரிந்தும் சபாநாயகர் கரு ஜயசூரிய. மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்ததன் நோக்கம் என்ன என்பது குறித்து சம்பந்தன். சுமந்திரன் ஆகியோருக்கு சார்பான தமிழ்த்தரப்புகள் கேள்விகள் எழுப்பியுள்ளன.

### ரணிலின் அமைதி

உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டத்தரணி சுமந்திரன் எச்சரிக்கைவேறு விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் பதவி விவகாரம் குறித்து ஐக்கியதேசியக் கட்சி விசனத்தை வெளியிட்டாலும் ரணில் விக்கிரமசிங்க இதுவரை வெளிப்படையாகக் கருத்துக் கூறவில்லை.

மஹிந்த எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதில் சட்டப் பிரச்சினை உண்டு என்று தெரிந்தும் ரணில் விக்கிரமசிங்க அமைதியாகவே உள்ளார்.



இந்தவொரு நிலைலேதான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக சம்பந்தன் மஹிந்தவுடன் மோதுப்படுகின்றார்.

அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார நலன்சார்ந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக வளைந்து கொடுத்து ஈழத் தமிழர்களின் தாயகம் சுயாட்சி என்ற கோட்பாடுகளை இலங்கைத் தேசிய அரசியலுடன் கரைப்பதற்கான மற்றுமொரு முயற்சிதான் இந்த எதிர்க்கட்சித் தலைமைக்கான போட்டி என அவதானிகள் கூறுகின்றனர்.

## ஈழத் தமிழர்களின் தன்னாட்சி அதிகாரத்தை இலங்கைத் தேசியத்துடன் கரைக்கும் முயற்சிக்கு கிடைத்த பயன்

இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க முடியாது என்பது கடந்த எழுபது ஆண்டுகால அனுபவம்.

ஆனாலும் ஒற்றையாட்சி முறைமைக்குள் தமிழ் மக்கள் வாழ முடியும் என்ற கருத்தியலை சர்வதேச அரங்கில் ஏற்படுத்த ரணில் விக்கிரமசிங்க 2002 ஆம் ஆண்டு எடுத்த முயற்சிக்கு சம்பந்தன் சுமந்திரன் ஆகியோர் இன்று துணை போய்விட்டனர் என்று அரசியல் அவதானிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொண்ட சம்பந்தன், தற்போது அந்த ஒற்றையாட்சியில் கூட தனக்காக ஜனநாயகம் பேச சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் முன்வரவில்லை என்பதை தற்போதுகூட உணரவில்லை. அல்லது தெரிந்தும் தமிழ்த் தேசியக் கோட்பாட்டு அரசியலை நிராகரித்து வரும் இந்தியக் கருத்தியலின் அடிப்படையில் செயற்படுகின்றார் என்றே கருத இடமுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

### சம்பந்தன் ஐயாவின் ஜனநாயகப் போராட்டம்

எவ்வாறாயினும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்ட சம்பந்தன் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக நடத்தும் இந்த ஜனநாயகப் போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் கூறப்போகும் நேர்மையான பதில் என்ன?

இலங்கையில் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஜனநாயகம் இரண்டு வகையானதோ என்ற கேள்விதான் தற்போது விஞ்சிக் கிடக்கின்றன. அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவிக்காகப் பேசப்பட்ட ஜனநாயகம் சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காகப் பேசப்படவேயில்லை என்பதுதான்.

ஆக அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார நலன்சார்ந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக வளைந்து கொடுத்து ஈழத் தமிழர்களின் தாயகம் சுயாட்சி என்ற கோட்பாடுகளை இலங்கைத் தேசிய அரசியலுடன் கரைப்பதற்கான மற்றுமொரு முயற்சிதான் சம்பந்தனின் இந்த எதிர்க்கட்சித் தலைமைக்கான போட்டி.

ஆனாலும் இந்தப் போட்டியில் ரணில் விக்கிரமசிங்கவுக்காக குரல் கொடுத்த, ஏனைய சிங்கள அரசியல் கட்சிகள், பொது நிறுவனங்கள் சர்வதேச நாடுகள் சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக குரல் எழுப்பி ஜனநாயகத்தை நிலைநாட்டக் கூடிய சூழல் இல்லையென அவதானிகள் கூறுகின்றனர்.

ரணிலை அல்லது மஹிந்தவை காப்பாற்றும் நடவடிக்கைகளைத் தவிர சம்பந்தனைக் காப்பாற்ற சர்வதேச நாடுகள் ஒருபோதும் விரும்பாது என்பதை இனிமேலாவது தமிழரசுக் கட்சி புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் பூகோள அரசியலில் ரணில் அல்லது மஹிந்த மாத்திரமே அமெரிக்கா, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்குத் தேவை. சம்பந்தன் அல்லர்.

அப்படித் தேவை என்று அந்த நாடுகள் கருத வேண்டுமாக இருந்தால் இலங்கைத் தீவில் இரு தேசிய இனங்கள் இருக்கின்றன என்ற செய்தியை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ் தரப்புகள் உரத்துக் கூற வேண்டும்.

ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் தமிழ்த் தரப்புகள் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேயில்லை. இலங்கையின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தேர்தல் அரசியலில் மாத்திரமே தமிழ்த் தரப்பு ஈடுபடுகின்றது.

நன்றி:- கூர்மை

# அரச விரோத சூழ்ச்சி இன்னும் தொடர்கிறது

## ஆசு மாரசிங்க எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 22

கடந்த 50 நாள்களாக நாட்டில் இடம்பெற்ற அரச விரோத சூழ்ச்சியில் நாம் இன்று நாம் வெற்றி கொண்டாலும், இதனை முழுமையான வெற்றியாக நாம் கருதவில்லை என நாடாளு மன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.



பிரதமர் பதவியைக் கொள் ளையடிக்க முயன்றவர்கள் தற்போது, எதிர்க்கட்சித்தலை வர் பதவியையும் கொள்ளையடிக்கப் பார்க்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்–

அரசவிரோத சூழ்ச்சியை நாம் வெற்றிகொள்வதற்கு ஒத்து ழைத்த அனைத்துத் தரப்பின ருக்கும் எமது நன்றிகள். அத்துடன் டிசம்பர் 17 ஆம் திகதி இதனை முன்னிட்டு கொழும்புக்கு வந்த மக் களுக்கு எமது நன்றிகள்.

நாட்டில் இடம்பெற்ற இந்த அரசி யல் சூழ்ச்சியை நாம் அரசியல் துரோகமாகவே கருதுகிறோம். இதன் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்நிலையில், அவரது நாடாளு மன்ற உறுப்புரிமை தொடர்பில் எமக்குக் கேள்விகள் எழுந்துள் ளன. ஏனெனில், மஹிந்த மொட் டுக்கட்சி உறுப்புரிமையைப் பெற் றுக்கொண்டார் என அவரே கூறி னார்.

இரட்டை நிலைப்பாட்டில் இந்த விடயத்தில் இருக்கமுடியாது. இரண்டு கட்சிகளின் உறுப்பினராக இருந்து கொண்டு மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித்தலைவராகவும் இருக்க முடியாது. இதனாலேயே தெரிவுக் குழுவூடாக இந்தவிடயத்தை ஆராய வேண்டும் என நாம் கேட்டுக் கொண்டோம்.

இந்தச் சூழ்ச்சி மற்றும் மொட்டுக்கட்சியின் உறுப்புரிமை யைப் பெற்றுக்கொண்டமை ஒரு திட்டமிடப்பட்ட செயற்பாடு என்றே தெரிகிறது. தற்போது, சுதந்திரக்கட்சி யின் உறுப்பினர்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறாயின், அவர் மக்கள் முன்னனிலையில் வந்து தமது செயற்பாடு தொடர்பில் மன்னிப்புக் கோரவேண்டும். தாங்கள் ஒரு நாடகத்தைத் தான் மேற்கொண் டோம் என்றும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாவே தொடர்ந்தும் இருக்கிறோம் என்றும் அந்தத் தரப்பினர் கூறவேண்டும்.

இனியாவது மக்களை முட்டாளாக் கும் செயற்பாட்டை மஹிந்த தரப் பினர் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கலாம் என நினைத்து விட்டார்கள்.

எனவே, நாடாளுமன்றில் வைத்து அவர் பகிரங்கமாக மன்னிப் புக் கோரவேண்டும். இந்தத் தரப்பி னரின் செயற்பாடுகளால் நாடே கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டது. இதற்கு முழுப் பொறுப்பையும் மஹிந்த உள் ளிட்டத் தரப்பினர் ஏற் றுக்கொள்ள வேண் டும்.

இவர்களால் நாட் டுக்கு மட்டுமன்றி, நாடாளுமன்றுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. சில ஊடகங்களும் இதற் கான ஒத்துழைப்புக் களை வழங்கியிருந் தன. இவையனைத் தையும் ஆராய்ந்து, இந் தச் சூழ்ச்சி குறித்து வெகு விரைவிலேயே நாம் விசாரணைகளை மேற்கொள்ளவுள் ளோம். இதற்குக் காரணமானவர்க ளுக்கு எதிராக நாம் கடுமையான சட்டத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவோம்.

இந்தச் சூழ்ச்சிக்குக் காரணமான வர்கள் இனிமேல் அரசியல் வாழ்க்கை யைத் தொடரக் கூடாது என்பதில் மக் கள் உறுதியாக இருக்கவேண்டும். அத்தோடு, அவர்களின் உறுப்புரிமை தொடர்பில் தெரிவுக்குழுவூடாக விசா ரணைகளும் நடைபெற வேண் டும். அதற்கு எதிராகச் சபாநாயகர் நட வடிக்கை எடுக்காவிட்டால், நீதிமன் றத்தை நாடவும் நாம் தீர்மானித்துள் ளோம்.

ஏனெனில், நாடாளுமன்றத் தேர் தலின்போது தாமரை மொட்டுக்கு மக் கள் வாக்களிக்கவில்லை. இதுவும் நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறும் ஒரு செயற்பாடாகும். பிரதமர் பதவி யைக் கொள்ளையடிக்க முயன்றவர் தற்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கொள்ளையடிக்க பார்க்கிறார்–என்றார். (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியில் இளைஞர்கள் இல்லையா?

## ரணிலைச் சீண்டுகிறார் நாமல்



கொழும்பு, டிசெ. 22

பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவின் கட்டுப்பாட் டின்கீழ் இளைஞர் விவ கார அமைச்சு கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர் பில் நாமல் ராஜபக்ஷ எம்.பி. விசனம் வெளியிட் டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன் னணி அரசின் அமைச்ச ரவை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன முன் னிலையில் நேற்று முன் தினம் பதவியேற்றது.

இதன்போது தேசிய கொள்கை, பொருளாதார, தொழில் பயிற்சி, மீள்குடி யேற்றம், வடக்கு அபிவி ருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ரணி லிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து தனது உத்தியோகப்பூர்வ டுவிட் டர்பக்கத்தில் கருத்துவெளி யிட்டுள்ள நாமல், இளை ஞர்விவகாரத்தைப் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சியில் இளைஞர்களே இல்லையா என கேள்வியெழுப்பியுள் ளார்.

மேலும் கடந்த சில தினங்களாக அமைச்சர வையை நியமிப்பதை விடுத்து தமது கட்சி உறுப் புரிமை பற்றிப் பேசி ஐக்கிய தேசியக் கட்சியினர் கால விரயம் செய்துள்ளன என வும் அவர் குற்றம் சாட்டி யிருந்தார். (ஐ)

# ஐ.தே.கவினரின் புதிய அரசை கட்டுப்படுத்துவார் மைத்திரி

## வாசுதேவ நாணயக்கார உறுதி

கொழும்பு, டிசெ. 22

புதிய அரசுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் ஆதரவு வழங்கமாட்டார். சட்டம் ஒழுங்கு அமைச்சின் ஊடாக தொடர் அழுத்தங்களையே பிர யோகிப்பார் என நாடாளு மன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார தெரி வித்தார்.



அவர் மேலும் தெரிவிக் கையில்–

தேசிய அரசில் முக்கி யமான அமைச்சுக்களிலே பெரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. அந்த அமைச் சுக்களுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர்களும் மோசடிகளுக்குத் துணை போயுள்ளார்கள். தற் போது புதிய அரசில் அமைச்சரவை நியமிக்கப்பட்டுள் ளது. இந்த அமைச்சரவை நியமனத்தில் எவ்வித மாற் றங்களும் இடம் பெறவில்லை. ஊழல்வாதிகள் கடந்த அரசில் வகித்த பதவி களே மீண்டும் வழங்கப்பட்டுள் ளன.

அமைச்சுக்களின் நியமனம் 30 இற்குள் வரைய றுக்கப்பட்டமையானது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சில முக்கியமானவர் களுக்கு பதவிகள் வழங்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை. ஒருசிலரது எதிர்பார்ப்புக்களுக்கு தடையை ஏற்படுத்தியுள்ளது–என்றார். (ஐ)

# பொன்சேகா, பாலிதவுக்கு அமைச்சு பதவிகள் உறுதி

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் வஜிர

கொழும்பு, டிசெ. 22

சரத்பொன்சேகா மற்றும் பாலித ரங்கேபண்டார ஆகியோர் இன்னும் அமைச்சின் பதவிகளுக்கான பட்டியலில் உள்வாங்கப்பட்டுள் ளனர் என அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைப் பதவிப் பிர மாணத்தை அடுத்து அலரி மாளிகையில் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

சரத்பொன்சேகாவுக்கு அமைச் சுப் பதவி வழங்குவது தொடர்பில் சில சட்ட சிக்கல்கள் ஏற்பட்டுள் ளன. அதாவது, அவர் பீல்ட் மார் ஷல் என்பதால், வேறு பதவிக ளைப் பெற்றுக்கொள்ள முடியுமா எனும் கேள்வி எழுந்துள்ளது.

அதேநேரம், அவர் முன்னாள் இராணுவ வீரராகவும் தான் கருதப்படுகிறார். முன்னாள் இரா ணுவ வீரர் ஒருவருக்கு ஏனையப் பதவிகளைப் பொறுப்பேற்பதில், எந்தவொரு சட்டச் சிக்கலும் இல்லை. இவ்வாறு இந்த விடயத் தில் ஒரு பிரச்சினை இருந்து வருகிறது.

அத்தோடு பொன்சேகா மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியோரி டமும் சில பிரச்சினைகள் இருக்கின் றன. இதன் காரணமாகவே அவர் கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட வில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதியு டன் பிரதமர் பேச்சு நடத்தியுள்ளார். விரைவில் இவர்கள் இருவரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட வுள்ளனர்.

மேலும், சுதந்திரக் கட்சியிலிருந் தும் சிலர் அரசுடன் இணைந்து கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு



அமைச்சுப் பதவிகளை வழங்கு வது தொடர்பில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனதான் தீர்மா னத்தை எடுக்கவேண்டும்.

எவ்வாறாயினும், இந்த அனைத் துப் பிரச்சினைகளும் இந்த நடப் பாண்டுக்குள்ளேயே முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலை யிலேயே அனைவரும் இருக்கி றோம்–என்றார். (ஐ)



# அரசாங்க அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

**'ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் – 2019' தொடர்பான அறிவித்தல்**

28.11.2018ம் திகதிய பத்திரிகையில் பிர சுரிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டிற்கான ஒப் பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்ட பதிவிற்கான இறுதித் திகதி **27.12.2018** ஆம் திகதிவரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நா.வேதநாயகன்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்



# பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் விளையாட ஸ்மித்துக்கு தடை

பங்களாதேஷ் பிரீமியர் லீக் போட்டியில் விளையாட ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித்துக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் ரி-20 தொடரை நடத்தி வருகிறது. அதன்படி அடுத்த சீசன் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்கேற்றுள்ள அணிகளில் ஒன்றான கொமிலா விக்டோரியன்ஸ் பாகிஸ்தான் வீரர் சொயிப் மலிக்கை ஏலத்தில் எடுத்திருந்தது. இவர் தொடரின் மத்தியில் சர்வதேச அணிக்குத் திரும்ப இருக்கிறார்.

இதனால் கொமிலா விக்டோரியன்ஸ் ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித்தை மாற்று வீரராக ஒப்பந்தம் செய்தது. இதற்கு மற்ற அணிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்நிலையில் பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் ஸ்மித் விளையாடுவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் நிஜாமுதீன் சவுத்ரி கூறுகையில்,

பங்களாதேஷ் பிரீமியர் லீக்கின் விதிப்படி, ஒரு அணி மாற்று வீரர்களை தேர்வு செய்ய வேண்டுமென்றால், அவருடைய பெயர் வீரர்களின் ஏலத்திற்கான தொடக்க வரைவுப் பட்டியலில் இடம்பெற வேண்டும். ஆனால், ஸ்மித் பெயர் தொடக்க வரைவில் இல்லை.

ஸ்மித் விளையாடுவதற்கு சில அணிகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஆகவே, நாங்கள் பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் விளையாட அவருக்கு தடைவிதித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# பந்துகள் உடலை தாக்கின நான் உறுதியாக நின்றேன்

நியூசிலாந்து பந்துவீச்சாளர்களின் பந்துகள் உடலை தாக்கின. ஆனால் நான் உறுதியாக நின்றேன் என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியுஸ் நியுசிலாந்திற்கு எதிரான முதலாவது டெஸ்டின் இரண்டாவது இனிங்சில் தான் துடுப்பெடுத்தாடிய விதம் குறித்து தெரிவித்துள்ளார்.




குசால் மெண்டிஸூடன் இணைந்து நான்காவது விக்கெட்டுக்காக ஆட்டமிழக்காமல் 267 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியை தோல்வியிலிருந்து காப்பாற்றியமை குறித்து மத்தியுஸ் பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் ஆக்ரோசமாகப் பந்து வீசினார்கள். எங்களது உடல்களைக் குறிவைத்து பந்து வீசினார்கள். அந்தப் பந்துகளைத் தொடாத வரை நான் ஆட்டமிழக்கமாட்டேன் என்பது எனக்குத் தெரியும். பந்துகள் உடலை தாக்கியபோதிலும் நான் உறுதியாக நிலைத்து நின்றேன். அவை என்னை காயப்படுத்தும். ஆனால் என்னை ஆட்டமிழக்கச்செய்யாது என்பது எனக்கு தெரிந்திருந்தது.

நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்களுக்கும் நான் அதே செய்தியையே தெரிவிக்க விரும்பினேன். நீங்கள் எனது உடலை இலக்குவைத்து பந்து வீசலாம். பவுன்சர்களை வீசலாம். ஆனால் நான் இலகுவில் ஆட்டமிழக்கமாட்டேன் என்ற செய்தியை நியூசிலாந்து அணி வீரர்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன்.

மூன்றாவது நாள் மாலையில் இலங்கை அணிக்கு அது மிகவும் முக்கியமான தருணமாக காணப்பட்டது. நானும் குசல் மெண்டிஸூம் நிலைத்து நின்று விளையாடத் தீர்மானித்தோம்.

சிறிய சிறிய காயங்கள் பல ஏற்பட்டன. ஆனால் அவை அனைத்தும் பயனுள்ளவை-என்றார்.



# மேற்கிந்தியத் தீவுகளுக்கு பங்களாதேஷ் அணி பதிலடி

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டியில், பங்களாதேஷ் அணி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை, பங்களாதேஷ் அணி 1-1 என்ற கணக்கில் சமநிலைப்படுத்தியுள்ளது.

டாக்கா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக லிட்டொன் தாஸ் 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் செல்டொன் கோட்ரெல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, 212 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 19.2 ஓவர்களில் 175 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பங்களாதேஷ் அணி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக ரொவ்மன் பவல் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சகிப் ஹல் ஹசன் 5 விக்கெட்டுகளையும், முஷ்டபிகுர் ரஹ்மான் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணி சார்பில், துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும், பந்து வீச்சில் 5 விக்கெட்டுகளையும் சாய்த்த சகிப் ஹல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரின் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டி இன்று டாக்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேர்தலில் போட்டியிடவேமாட்டேன்

## திலங்க சுமதிபால அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்காக நான்கு பேர் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அதன்படி முன்னாள் தலைவர்களான திலங்க சுமதிபால, ஜயந்த தர்மதாச, முன்னாள் செயலாளரும் தற்போதைய உபதலைவருமான மொஹான் டி சில்வா மற்றும் முன்னாள் செயலாளர் நிஷாந்த ரணதுங்க ஆகியோர் இவ்வாறு தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு திலங்க சுமதிபால போட்டியிடுவதற்காக வழங்கப்பட்டுள்ள பெயர் பட்டியலை நிராகரிக்க உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு நிஷாந்த ரணதுங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தலில் வேட்பாளருக்காக திலங்க சுமதிபாலவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை சட்டத்திற்கு முரணானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் திலங்க சுமதிபால இந்தப் பதவிக்காகப் போட்டியிட்டால் விளையாட்டுச் சட்டத்தின் விதிகள் மீறப்படும் என மனுதாரர் அந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே எதிர்வரும்



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தலில் தான் போட்டியிடுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்தராஜபக்ஷவைச்சபாநாயகர் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்ததையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக இதற்குத் தீர்வு காணுமாறும் மூன்று கட்சிகளும் வலியுறுத்தியிருந்தன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக நாடாளுமன்றம் சென்ற மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைந்து கொண்டதால், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை செல்லுபடியானதா என்றும் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதையடுத்து இறுதி முடிவை நேற்று அறிவிக்கவுள்ளதாக சபாநாயகர் அன்று தெரிவித்திருந்தார். எனினும், இறுதி முடிவு நேற்று அறிவிக்கப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்துக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. தெரிவுக்குழு ஊடாக இதற்குத் தீர்வு காணுமாறு கோரப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர எம்.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் எனக்குக் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். எனவே, இவை தொடர்பில் ஆராய்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி எவருக்கு வழங்கப்படலாம் என்பதை விரைவில் அறிவிப்பேன் என்று சபாநாயகர் நேற்று தெரிவித்தார். இதனால் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கடும் சர்ச்சை தொடர்கின்றது. (ஐ)

## மிரட்டலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடனேயே தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

10 வருடங்கள் ஜனாதிபதியாக முழுமையான அதிகாரத்தை கொண்டிருந்தபோது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாத மஹிந்த, தற்போது மக்களின் பிரச்சினை குறித்து பேசுவது ஆச்சரியமாக உள்ளது.

ஆட்சியில் இருக்கும்போது மக்களின் வாழ்க்கைச் சுமையை உயர்த்தி, வர்த்தகர்களுக்குச் சலுகைகளை வழங்கியவர்கள் தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்தவுடன் மக்கள் நலன் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் அதிகார ஆசை காரணமாக கடந்த 51 நாட்களில் சுற்றுலாத்துறை, சர்வதேச முதலீடுகள் என முழு நாடும் பெரும் பாதிப்பிற்குள்ளானது – என்றார். (ஐ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியாகப் பதிவு செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியசெயற்குழு நேற்று அனுமதி வழங்கியது.

ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட மத்தியசெயற்குழுக்கூட்டம் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது.

புதிய அரசின் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள், அமைச்சரவை நியமனம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சிக் கட்சி தலைமையில் தற்போது செயற்படும் அரசியல் கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணியை, 'தேசிய ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து பங்காளிக் கட்சிகளுடன் அடுத்துவரும் நாட்களில் பேச்சுகள் நடத்தப்படவுள்ளன.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தேர்வும் இடம்பெற்றது. பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸவும், உப தலைவராக ரவிகருணாநாயக்கவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஐ.தே.கவின் தொழிற்சங்க நடவடிக்கை பிரிவு பாலித ரங்கே பண்டாரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு ஒன்றை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த போதும் அதனை எந்தவொரு காரணமுமின்றி ஜனாதிபதி நீக்கியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தத் தீர்மானம் தனது அடிப்படை உரிமையை மீறும் செயல் என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அவரது சட்டவாளர்கள் அடிப்படை உரிமை மனு ஒன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## என் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரன் என் மீது வீண்பழியைச் சுமத்தி வருகிறார். சபாநாயகர் இதில் கவனம் செலுத்த வேண்டும்

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எனக்கு எதிராக ஜனாதிபதி கொலை சதியொன்றை முன்வைத்துள்ளார். இது தொடர்பில் நான் சபாநாயகருக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தேன்.

இதற்கானபதிலைப்பொலிஸ்மா அதிபர் தற்போது அனுப்பியுள்ளார். இதிலிருந்தே இந்தக் கொலைச் சதிக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எனத் தெரியவந்துள்ளது. இந் நிலையில், மீண்டும் நாமல்குமார என்பவர் என்னைத் தொடர்பு படுத்திக் கதைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

எனவே, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகத் தேவையில்லாமல் என் மீது குற்றம் சுமத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

## எதிர்க்கட்சித் தலைவராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொன்று கையளித்துள்ளது.

மஹிந்தவை எதிர்க்கட்சித் தலைவராகவும், மஹிந்த அமரவீரவை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாகவும் அங்கீகரிப்பதாக சபாநாயகர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் அறிவித்தார்.

இந்நிலையில் இதனை எதிர்க்கும் வகையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் நேற்று இந்த மனு கையளிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும் விளங்குகின்ற நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை எதிர்க்கட்சியாகவும் கருத முடியாது என அந்த மனுவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதியாக மாத்திரமின்றி அமைச்சரவை அமைச்சராகவும், அவருக்கு கீழ் ஐந்து அமைச்சுப் பதவிகளும் காணப்படுகின்ற நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை எதிர்க்கட்சியாக அங்கீகரிக்க முடியாது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஐ.நா.செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஐ.நா பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்,

இலங்கையின் ஜனநாயக அமைப்புகளின் ஆற்றலை ஐ.நா பொதுச் செயலர் பாராட்டுகிறார். ஜனநாயகத்தை மதிப்பது மற்றும் மக்களின் நலன்களுக்காக, நாட்டில் உள்ள அனைத்துத் தரப்புகளும், அரசியல் வேறுபாடுகளைத்தீர்ப்பதற்குப்புதிய அமைச்சரவை நியமனத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் புலம்பல் சரியா? பிழையா? என்பதை அவரின் மனச்சாட்சியே சொல்லட்டும். நாங்கள் அவருடன் முரண்பட விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் நான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினராகவே தொடர்ந்து செயற்படுகின்றேன்.

தற்போது எதிரணியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே அதிக உறுப்பினர்கள் உள்ளனர். இதனால் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை நாம் பெற்றுள்ளோம்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் எம்மைத் தேடி வந்தது. எவரிடமும் மண்டியிட்டு இந்தப் பதவியை நாம் பெறவில்லை.

எல்லாவற்றுக்கும் ஆமாம் போட்டு அடிமைகளாக இருக்க நாம் விரும்பவில்லை. பலமான எதிர்க்கட்சியாகத் திகழ்வோம் – என்றார். (ஐ)

## எரிபொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 92 மற்றும் 96 ஒக்ரைன் ரகப் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவாலும், ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாவாலும், சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 125 ரூபாவாகவும், 95 ஒக்ரைன் பெற்றோலின் விலை 149 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்படுகிறது.

நல்லாட்சியின் கீழ் வகுக்கப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமையவே விலை குறைப்பு இடம்பெற்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு முடிவடைந்தபின்னர் 2019 ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை, நிதி அமைச்சரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதையடுத்து கருத்து வெளியிடுகையிலேயே விலை குறைப்பு அறிவிப்பை பிரதமர் ரணில் விடுத்தார். (ஐ)

## அமைதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம். நாட்டுக்கு விரோதமான செயற்பாட்டை மேற்கொண்டால் நிச்சயமாக அதற்கான எதிர்ப்பை வெளியிடுவோம் என, நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ அரசை எச்சரித்துள்ளார்.

இடைக்கால கணக்கறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று எமது நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. நாட்டில் பாரிய சவால் இருக்கும்போது தான் நாம் அரசைப் பொறுப்பேற்றோம். ஆனால், அதனைக் கொண்டு செல்வதற்குத் தடை ஏற்பட்டது.

எரிபொருள் விலையைக் குறைப்பதாக பிரதமர் ரணில் இன்று(நேற்று) அறிவித்துள்ளார். ஆனால், நாம் ஆட்சிக்கு வந்து எரிபொருள் விலையைக் குறைக்கும் முன்னரே கடந்த காலங்களில் அதனை குறைத்திருக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் வரி விதிக்கப்படுகிறது. இதிலிருந்து மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் வரிகளையும் குறைத்தோம்.

ஒரு வேளைக்கூடச் சாப்பிட முடியாத மக்கள் இன்றும் நாட்டில் இருக்கிறார்கள். இதனை உணர்ந்து வரி அதிகரிப்புகளை மேற்கொள்ளவேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் கூறும் எல்லாவற்றையும் செய்ய வேண்டாம். அவர்கள் சொல்வது அனைத்தையும் செய்தால் மக்கள் தான் இறுதியில் பாதிக்கப்படுவார்கள். மக்கள் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அன்று நாம் அரசைப் பொறுப்பேற்காவிட்டால், பிரான்ஸ் அல்லது கிரேக்கத்தின் நிலைமைக்கு நாடு சென்றிருக்கும் – என்றார்.

## இடைக்காலக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள சமரவீரவால் நாடாளுமன்றத்தில் நேற்று காலை சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கை 96 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை மீது இலத்திரனியல் முறைமையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இலத்திரனியல் முறைமையின் கீழ் வாக்களிக்க முடியாத சிலர் பெயர் குறிப்பிடப்பட்டு வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

இந்தக் கணக்கறிக்கையின் மீது காலை முதல் மாலை வரை விவாதம் நடைபெற்ற பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென ஜே.வி.பி. கோரியது.

அதன்படி நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக 102 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன.

வாக்கெடுப்பின்போது சபையில் அமர்ந்திருந்த ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் 102 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஜே.வி.பியின் 6 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினர் வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகவில்லை. எனினும், இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தின்போது, நாட்டின் நலன் கருதி இடைக்காலக் கணக்கறிக்கைக்கு தாம் ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருந்தனர். (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணேசன் சவால் விடுத்துள்ளார்.

அடுக்கடுக்காகத் தேர்தலை நடத்தி மக்கள் பணத்தை விரயம் செய்ய முடியாது எனக் குறிப்பிட்ட அவர், முதலில் ஜனாதிபதித் தேர்தலையே நடத்தவேண்டும் எனவும் கூறினார்.

தனது அமைச்சுப் பொறுப்புக்களை நேற்றுப் பொறுப்பேற்றார் மனோ கணேசன்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே, இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

தேர்தலைச் சந்திக்க நாம் தயாராகவிருக்கின்றோம். ஆனால், தேர்தலை நடத்துவதற்குக் கால அட்டவணையொன்று காணப்படுகிறது. வரையறையொன்று காணப்படுகிறது.

ஒரு பொதுத் தேர்தலை நடத்துவதென்றால் அதற்கொரு விலை இருக்கிறது. பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 500 கோடி ரூபா செலவாகும். இதனையாரும் மறந்துவிடக் கூடாது – என்றார். (ஐ)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள நிலையில் நேற்று இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவியேற்றனர்.

நேற்று மாலை நடந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்தினால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்துப் பதவி விலகிய விஜயகலா மகேஸ்வரனுக்கும் கல்வி இராஜாங்க அமைச்சராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள்

சம்பிக்க பிரேமதாஸ – சக்தி, எரிசக்தி மற்றும் தொழில் அபிவிருத்தி

லக்கி ஜயவர்தன – நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி

திலீப் வெதஆராச்சி – கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி

அசோக் அபேசிங்க – போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து

ரஞ்சித் அலுவிஹார – சுற்றுலா அபிவிருத்தி

வடிவேல் சுரேஷ்– பெருந்தோட்டத்துறை

எச்.எம்.எம். ஹரீஸ் – உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்

பைசல் காசிம் – சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவம்

அமீர் அலி – விவசாயம், கிராமப்புறப் பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி

ருவன் விஜயவர்த்தன – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக பதவியேற்றார்

நிரோஷன் பெரேரா – தேசிய கொள்கை மற்றும் பொருளாதாரம்

அலி சாஹிர் மௌலானா – சமூக வலுவூட்டல்

எரான் விக்கிரமரத்ன – நிதி

ஜே.சி. அலவத்துவல – உள்நாட்டலுவல்கள்

ரஞ்சன் ராமநாயக்க – நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி

விஜயகலா மகேஸ்வரன் – கல்வி

பிரதி அமைச்சர்கள்

நளின் பண்டார – சர்வதேச வர்த்தகம்

புத்திக்க பதிரன – தொழில் மற்றும் வர்த்தகம்

அமைச்சரவை அந்தஸ்து அல்லா அமைச்சர்கள்

சுஜீவ சேனசிங்க – அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி

அஜித் பி. பெரேரா – டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

ஹர் டி சில்வா – பொது விநியோகம், பொருளாதாரச் சீர்திருத்தம்










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 22.12.2018



## நிரந்தர விடிவு கைசேர சிதம்பரப் பெருமானே தேரில் வா!



சீரோடு எமையாளும் காரை நகர் வாழும்
சிதம்பர வாணனைப் பாரும் – ஐந்து
தேரோடும் பெருமானின் திருவாசல் படியேற
தீராத வினையெல்லாம் தீரும்.
பேர் பெறும் வாழ்வினை நீர்பெற வேண்டில்
ஓடோடி அவன் நாமம் கூறும் – எதையும்
யாரோடும் நோகாமல் அவனோடு நொந்தாலே
அழகாக உம் வாழ்வு மாறும்.

நிரந்தர அமைதியை நிரந்தர மாக்கிட
சிதம்பர தரிசனம் செய்வோம் – எமக்கு
வரம்தர அவன்போல் பரம்பொருள் இல்லை
கரம் தொழக் கெதியினில் உய்வோம்.
பெருமிடர் கருகிட ஒருமுடர் தீர்த்தம்
பருகிடப் பலவினை மாய்க்கும் – அப்பன்
திருவிடம் போலெமக்கு ஓரிடம் இந்தத்
தரணியில் எங்கெடா வாய்க்கும்?

திருமுகம் கண்டுநாம் பெறும் சுகம் கோடி
தேரையே எம்விழி நோக்கும் – ஐயன்
வரும்வழி எங்கிலும் நறுமலர் பூத்திட
வாஞ்சையாய் அலைகளும் பூக்கும்.
திருத்தலம் அதிர்ந்திட தவில்நாதஸ் வரமும்
பறையொடுஉடுக்கையும்முழங்கும்–ஈசன்
அருளிடம் எப்பவும் நிழலிடம் போலவே
அடியவர்க் கென்றும் விளங்கும்.

நிரந்தர விடிவு கைசேர வேண்டி
சிதம்பரப்பெருமானேதேரில்வா–உன்னை
கரம்தொழும் அடியர் கலியெலாம் அகல
கருணை காட்ட நீ நேரில்வா.
வரம் தர வேண்டி வலம்வரும் வள்ளலே
வழிபிறந்து இம்மண் விடியவா – உந்தன்
புறம்புறம் அழுது இறைஞ்சுறோம் இறைவனே
பொய்யிலா வாழ்வெமக்கு ஒளிரவா.

- கவிப்புலவர் வேலணையூர் சுரேஷ்.



இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

நவம் ரெக்ஸ்
இல. 33, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல.10, யூபிலி பஸார், யாழ்ப்பாணம்.

செந்தூரன் வாசனை பத்திகள்
ஜே.பி.சிவசுப்பிரமணியம் (பிரைவேற் லிமிட்டட்)
இல.10, எஸ்.எம்.கேணியடி, காரைநகர்.




படர்மணிக் குன்றே பரம்பொருள் சிதம்பரா! பக்தரைக் காத்திட தேரேறி வாவா...!





# காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – ம

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## ஈழத்துச் சிதம்பரக்கூத்தன்

சிறப்பிதழாக்கம் - காரையூரான்

திருமூலரால் "சிவபூமி" என்று போற்றப்பட்ட ஈழத்திருநாட்டில் திருவருள் பொழியும் சிவத் தலங்களில் ஒன்றாக விளங்குவது "ஈழத்துச் சிதம்பரம்" என்று போற்றப்படும் காரைநகர் திண்ணபுரச்சிவன் கோயிலாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்பையும் தொன்மைப் பெருமையையும் பெற்றுள்ள ஆலயமாகும் இது. இத்திருத்தலத்தில் மார்கழித் திருவாதிரை இரதோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய பூரணை நாள் இன்றாகும். திருவாதிரை சிவனுக்குரிய நட்சத்திர நாளாகும். எம்பெருமானை ஆதிரையான் என்றும் ஆதிரை முதல்வன் என்றும் போற்றுகின்றார்கள் அப்பரடிகள் –


"வேதநாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே"

என்று தம் தேவாரத்தில் ஆதிரை நாயகன் என்று போற்றுகின்றார்.

ஞானக்குழந்தை சம்பந்தரும் "ஆதிரை நாள் காணாது போதியோ" என்று பூம்பாவையை எழுப்புகின்றபோது பாடி ஆதிரையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார்.

தட்சணாய காலத்தின் இறுதி மாதம் மார்கழி. தேவர்களுக்கு அதிகாலைப் பொழுதாகும். இம்மாதம் பிரம்மமுகூர்த்தப் பொழுதாக அமைவதால் மதிப்புக்குரிய மாதமாகும். இறையன்பில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கை நிலை இம்மாதத்திற்கு உண்டு. இது, பொன்னம்பலக் கூத்தன், ஆடல் வல்லான், நடராசாப்பெருமான் பரிவார மூர்த்திகள் சூழத்தேரில் பவனிவரும் திருநாளாகும்.

"பூலோகக்கைலாயம்" என்றும் கோயில் என்றும் போற்றப்படுவது தமிழகத்திலுள்ள சிதம்பரமாகும். இத்தலம் சைவமக்களின் முதன்மையான ஆலயமாகக் கருதப்படுகின்றது. சிற்றம்பலம், பொன்னம்பலம், தில்



## இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள் எல்லோ


கஜமுகன் ஹாட்வெயர்
இல.147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2833

Be.Es.En.TRADERS
EG1, Central Road,Colombo 12, Srilanka.
011-234 8418

நியூ திருப்பதி ரெக்ஸ்
இல.50, பள்ளிவாசல் லேன், பெரியகடை, யாழ்ப்பாணம்.
021- 320 2590

ஸ்ரீ துவாரகா
229 2/3, பிரதா
கொழும்பு

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யாழ். சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி.
021- 228 5137

பிள்ளையார் ஹாட்வெயர் &மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
யாழ். சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி.
021- 228 3663

கண்டி பற்றிக் சென்ரர்
26 1/1, பிரதான வீதி, கொழும்பு -11
011 - 232 9661

ஏகாம்
புடைவை ம
இல.74(7),பெரிய கடை,
021 - 2222

வெங்கடேஸ்வரா
இல.66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 8306

மணி ஐயப்பா
நகைப்பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக, யாழ்சாலை, கிளிநொச்சி.
021-2280067

கல்கமுவ ஸ்ரோர்ஸ்
இல.133/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0966

சிங்கப்பூர் ஜ
இல.28,கஸ்தூரி
யாழ்ப்பாண
021 - 459 0

சிறி மாதவன்
இல.97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 6365

அற்புதா ரேடிங் கம்பனி
இல198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

K.S.M Communication
146, Morden Market, Jaffna.
T.P: 021 222 3079, Fax: 021 221 6622

நல்லைக்
ஹாட்வெ
A-9 வீதி, கிளி
021- 2285

## காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 22.12.2018



### “உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்”



ஈழ மணி நாட்டின் சிறப்பு மிக்க சிவ தலங்களில் ஈழத்து சிதம்பரம் எனப் பெயர்பெறும் காரைநகர் சிவன்கோவிலும் ஒன்றாகும். இந்துக்களின் பஞ்ச பூத தலங்களில் ஒன்றான ஆகாயத் தலமான தென்னிந்தியாவில் இருக்கின்ற சிதம்பரத்தை ஒத்த சம்பிரதாயங்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற ஒரு தலமாக காரைநகர் திண்ணபுரம் பதியில் அமைந்திருக்கும் புண்ணிய தலம் விளங்குகிறது.

இது, மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் ஒரு கோவிலுக்குரிய அனைத்து அடிப்படை அம்சங்களும் அமைந்து 168 வருட வரலாறு கொண்ட ஒரு தலமாகும். இங்கே அருள்மிகு சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வர பெருமான் ஆலயத்தில் அருள்பாலித்து கொண்டு இருக்கின்றனர்.

இக்கோவிலில் பங்குனி உத்தரம் ஒட்டிய மகோற்சவம், ஆடிப்பூரத்தை ஒட்டிய அம்பாள் மகோற்சவம் என்பன இரு பெரும் மகோற்சவங்களாக நடைபெறுகிறது. இருந்தபோதும் மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட மார்கழி உற்சவமே விசேடமானதாகும்.

ஈழத்தின் தலைசிறந்த வியாபார விற்பன்னர்களாகவும், கல்விமான்களாகவும், சிவபக்தர்களாகவும் விளங்குகின்ற காரைநகர் மக்கள் இக் கோவிலின் திருவாதிரை மகோற்சவ காலத்தில் பஞ்சரதத்தில் பவனிவருகின்ற இறைவனை ஆராதிப்பதற்கென தமிழ் நாட்டிலிருந்தும் ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் தவில், நாதஸ்வர வித்துவான்களை வரவழைத்து இசை அலையை உருவாக்கி ஆடல்வல்லான் நடராஜ பெருமானை இசையை வைத்து தம் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்கின்ற காட்சி கண்கொள்ளாதது ஆகும்.

எம் ஊரவர்க்கு இயல்பாகவே இருக்கின்ற இயல்பூக்கமும், கடின உழைப்பும் தனித்துவமானது என மற்றவர் போற்றுவது போல் இவ் ஆலயத்தில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்களும் தனித்துவமானவையாகும். அதாவது இங்கு இருக்கின்ற திரு உலாவருகின்ற நடராஜ பெருமானது திரு உருவச்சிலை பதஞ்சலி வியாக்கிரபாதர் எனும் முனிவர்களுடன் கூடியதாகும். இவ்விதமாக முனிவருடன் கூடிய சிவகாமி அம்பாள் சமேதராக அமர்ந்திருக்கும் பாவனையில் உள்ள திருஉருவம் இந்தியாவிலும் இரண்டொரு தலங்களில் மாத்திரமே உள்ளது.

அவனருளாலே அவன்தாள் வணங்கி அருள் பெறும் பாக்கியம் இன்று இங்கு கூடி இருக்கும் பூமி பந்தின் எல்லா மூலைகளில் இருந்தும் வருகை தந்த பக்தர்களுக்கு கிடைத்துள்ளது. உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் ஆகிய எம் பெருமானுடைய பஞ்சரத பவனியை காண வந்திருக்கும் அனைத்து பக்த அடியார்களும் அவனுடைய அருளை பெற்று உய்யப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**திரு. கு. சிவஞானசுந்தரம்**

**இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 2063

கணேசன் ஸ்ரோஸ்
இல.201, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 2830

இளவரசி சேலைச் சோலை
இல.125, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 2503

ரூபா பன்முக வர்த்தக நிலையம்
இல.104 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நாராயணா ஹாட்வெயர்
இல.92 C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 5390

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல.105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 6953

நியூ வேல் முருகன் ஜுவலர்ஸ்
இல.186, பசார் வீதி,
வவுனியா.
024- 222 8157

மகாராணி பட்டுச்சோலை
இல.50, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 3104

தனம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.22 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
021- 222 8544

சிறி சிவராம் றேடர்ஸ்
இல.248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 8629

T.S.K. TRADERS
இல.41, சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.
024- 222 6149

லலிதா ரெக்ஸ்
ஸ்ரீ லலிதா பெஷன்
இல.5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
021 222 5260
இல.165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**நிரந்தர விடிவு கைசேர வேண்டி**
**சிதம்பரப் பெருமானே தேரில்வா - உன்னை**
**கரம்தொழும் அடியர் கலியெலாம் அகல**
**கருணை காட்ட நீ நேரில்வா.**






# புதிய அறிமுகம்




35 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை நுகர்வோருக்கு ஊட்டச்சத்தை ஊட்டி நலமளித்து வந்துள்ள அங்கர், நாட்டின் முதலாவது ஸ்தானத்தில் திகழும் பால் மா வர்த்தகநாமம் என்ற பெயரை சம்பாதித்துள்ளது. இன்றைய தலைமுறையானது தினசரி பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன், முறையான ஊட்டச்சத்து அவர்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமாகும். அங்கர் கோல்ட் ஆனது ஊட்டச்சத்துகளின் செழுமை மற்றும் மேம்பட்ட சுவைகொண்ட புதிய மற்றும் மேம்பட்ட அங்கர் ஆகும்.

பாலின் நலச்செழுமை மற்றும் சொக்கிலேட் சுவை ஆகியவற்றுடன் அங்கர் கோல்ட் சொக்கிலேட் வெளிவருகின்றது. இது இரண்டு தேவைகளை ஒரு உற்பத்தி மூலமாக வழங்கும் சிறப்பைக் கொண்டதால் போட்டி உற்பத்திகளைப் போலன்றி, இதற்கு நீங்கள் வேறாக பாலைச் சேர்க்க வேண்டிய தேவை கிடையாது.

# S.V. முருகேசு





No:154, Hospital Road, Jaffna.
T.P: 021 222 8899,
021 492 5831

No:106, Hospital Road, Jaffna.
T.P: 021 492 5830, 021 222 4341
Fax: 021 222 4341

# தம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# ப்பிதழ் – 22.12.2018



## ங்கூத்தன் தேரில் பவனி

ரான்



லையம்பலம் என்றெல்லாம் போற்றும் பெருமையுடையது. தரிசிக்க முத்திதரும் தலமாகும். பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குகின்றது இது. மார்கழித் திருவாதிரை உற்சவமும் ஆருத்திரா தரிசனக் காட்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றுவரும் ஆலயமாகும். இவ்வாலயம் போன்று காரைநகர் திண்ணபுரச்சிவன் கோவிலும் இவ்விழாக்கள் மிகச் சிறப்பாகவும் இனிதாகவும் நடைபெற்று வருகின்ற ஆலயமாகும். அங்கு பின்பற்றப்படும் கிரியை முறைகள் இவ் ஆலயத்திலும் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. சிதம்பரத்தில் சிவனும் திருமாலும் அருகே அமர்ந்திருந்து அருள்பாலிப்பது போல ஈழத்துச் சிதம்பரத்திலும் சிவ பெருமானும் அரிஹரபுத்திரனாகிய ஐயனாரும் அருகருகே அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது.

நடராசப் பெருமானின் திருவுருவத்திலும் திருப்பொலிவிலும் சிதம்பர நடராசப் பெருமானை ஒத்து விளங்குவதாக அறஞர் பெருமக்கள் கூறுகின்றார்கள். வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் திருவடியின் இருமருங்கிலும் தொழுதேத்த முயலகன் மேல் ஊன்றிய வலத்திருப்பாதமும் தூக்கி வளைந்த இடப்பாதம் கொண்ட எம்பெருமான் சிவகாமி அம்மையுடன் அருளும் அழகும் ஒழுகத்தரும் காட்சியுடன் ஒத்து விளங்குகின்றன.

மார்கழித் திருவாதிரை நாளில் சிதம்பரம் சென்று கண்டுகளிக்க முடியாத அடியார் கூட்டங்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்கு வருகை தந்து ஆடவல்லானின் திருநடனக் காட்சியை கண்குளிரக்கண்டு திளைக்கின்றார்கள். அடியார்களுக்கு அருள்விருந்தாகவும் பாவவினை



களைப் போக்கிக்கொள்ளும் அருமருந்தாகவும் அம்பலக்கூத்தனின் ஆடல் விளங்குகின்றது. "அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தே கண்டேன்" எனச் சித்தர் கூறிய அமுதவாக்கு நினைவு கூரத்தக்கது.

மகேசுர வடிவங்கள் இருபத்தைந்தாகும். இவற்றில் நடராச வடிவமே மிகச் சிறந்த வடிவமாகும். அவ்வடிவத்தைக் கண்டு திளைத்து

"அஞ்சல் என்று அங்கை காட்டி
அழகிய முறுவல் காட்டிக்
குஞ்சித பாதமுங் காட்டிக்
குறித்தொரு பொருளைக் காட்டி
நெஞ்சுளே நடஞ்செய்கின்ற
நின்மலப்பொருளே போற்றி"

(VI ஆம் பக்கம் பார்க்க)

## நள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

கீஸ்
ன,
.

ஸ்ரீ துவாரகா ரெக்ஸ்
229 2/3, பிரதான வீதி,
கொழும்பு -11

சென்ரல் ஏஜென்சி
லாவ்ப் காஸ் விநியோகஸ்தர்கள்
519 C, ஜெயந்தி மாவத்தை, அனுராதபுரம்.

நோர்த் ஏஜென்சி
இல. 169, சந்தை உட்புறம்,
அனுராதபுரம்.

-11

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
இல.74(7),பெரிய கடை, யாழ்ப்பாணம்.
021 - 2222151

பொன்னம்பலம்
அரிசி ஆலையும் அரைக்கும் ஆலையும்
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்

சிவனருட்செல்வன்
அரிசி ஆலை
பெரிய பரந்தன், கரடிப்போக்கு, கிளிநொச்சி.
021 - 228 0009

பாணம்.

சிங்கப்பூர் ஜீவல்லறி
இல.28,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 459 0260

சம்பந்தன் அரிசி வாணிபம்
புகையிரதநிலையவீதி, கிளிநொச்சி
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

கதிர் ஓயில் சொப்
A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
021 - 228 5317

ion
fna.
1 6622

நல்லைக் குமரன் ஹாட்வெயர்
A-9 வீதி, கிளிநொச்சி.
021- 2285405.

குமரன் புடைவையகம்
A-9 வீதி, கிளிநொச்சி.
021- 2285374

T.S. ரான்ஸ்போட்ஸ்
கிளிநொச்சி. முல்லைத்தீவு.
077 - 247 4128